ॐ

ஓம்

ஸ்ரீ குருப்யோ நம :

# ஸ்ரீ ஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்

## வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட்

(பதிவு எண்: 226 / 1992)




சத்திரப்பட்டி சாலை,

வேதபுரீ, தேனி. - 625 531






ஓம்

ஸ்ரீ குருப்யோ நம:

# உள்ளம் தோறும் வள்ளுவம்

## வள்ளுவம் வழங்கும் வாழ்வியல்
## ஸனாதன நெறியில் வள்ளுவம்

### அறத்துப்பால்

# ஸ்ரீஸ்வாமீ பூர்ணாநந்தர்

**பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த மஹாஸ்வாமிகளின் சீடர்**



நாள் :
24, மாசி 2026

Date:
08, March 2026

www.vedaneri.org

வகுப்பு 27

அறத்துப்பால் - இல்லறவியல் - அதிகாரம் : 21

# தீவினையச்சம்

## பாபச்செயல்களைச் செய்வதற்கு அஞ்சுதல்



- உடலால் செய்யப்படுகின்ற குற்றச்செயல்கள் அனைத்தையும் செய்ய அஞ்சி அவற்றைச் செய்யாமல் விடுதல்.
- முக்கரணங்களில் மனதால் வாக்கால் நிகழும் குற்றங்களை விலக்கவேண்டும் என்று கூறியபின், உடலால் நிகழும் குற்றங்களை விலக்குதல் பற்றிக் கூறுகின்றார்.
- தீவினை – பிறர்க்கு துன்பம் ஏற்படுத்தும் தர்ம விரோதமான, சட்ட விரோதமான செயல்கள்.
- அஞ்சுதல் – செய்தால் பாபம் வரும் என்று பயப்படுதல்.




## குறள்கள்: 1 - 3 தீவினைக்கு அஞ்ச வேண்டும்

1. விவேகம் உடையவர் தீவினைக்கு அஞ்சுவர்
2. தீயை விட அஞ்சத்தக்கது தீவினை
3. எதிரிக்கும் தீமை செய்யாமை அறிவினுள் சிறந்த அறிவு.

## குறள்கள்: 4 - 9 தீவினை செய்பவன் கெடுவான்

4. கேடு நினைத்தலும் கேடாகும். தர்மதேவன் நீங்குவான்.
5. வறுமை வரும்.
6. துன்பம் வேண்டாதவன் தீவினை செய்யற்க.
7. அடுத்த பிறவி எடுத்தாலும் பாபம் தொடரும்.
8. தீவினைப் பயன் நிழலைப்போல் தொடர்ந்து வரும்.
9. இன்பம் விரும்பினால் தீவினை செய்யற்க.

## குறள்: 10 தீவினை செய்யாதவனுக்குக் கேடில்லை.

# 1. தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர் தீவினை யென்னும் செருக்கு.

தீயசெயல்கள் என்று சொல்லப்படும் மயக்கத்தைக்கு குறித்து ஏற்கனவே தீயசெயல்களில் பழக்கமுடையவர் பயப்படமாட்டார். அப்பழக்கமில்லாத மேலோர் பயப்படுவர்.

செருக்கு = மயக்கம் = அஞ்ஞானம்
தீவினை செய்வதற்குக் காரணமான செருக்கை - அஞ்ஞானத்தை - காரியமான தீவினை என்றே உபசாரமாகக் கூறினார்.

முற்பிறவியில் செய்த தீவினையுடையவர் - பாபம் உள்ளவர் - தற்போது தீவினை செய்ய அஞ்சுவதில்லை.

பாபத்தினால் அறிவு மறைக்கப்படுகிறது. அதனால் விவேகம் இல்லாமல் தங்கள் வாஸனைகளின்படியே மீண்டும் மீண்டும் தீவினைகளைப் பயப்படாமல் செய்கின்றனர்.

நல்வினை தீவினைகளின் விளைவை அறிந்த நல்லவர்கள் தீயசெயல்களைச் செய்யப் பயப்படுவர்.





## 2. தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப் படும்.

தீயசெயல்கள் பின்னர் துன்பமே தருதலால் அத்தீச்செயல்கள் தீயைவிட கெடுதலைச் செய்பவை என்றறிந்து ஒருவனால் பயப்படவேண்டியவை ஆகும்.

தீயவை = தீய செயல்கள்
தீய பயத்தலால் = தீயபயனையே தருவதால்
தீயினும் = தீயைவிட (ஆபத்தானவை என்று)
அஞ்சப்படும் = பயப்படவேண்டியவை

தீயானது சுடும் காலத்தில் மட்டும் துன்பம் தருகிறது.

தீயசெயல்கள் - பாபமாகி - வேறொரு காலத்திலும் வேறொரு இடத்திலும் வேறொரு உடம்பிலும் சென்று சுடும் தன்மை உடையன என்பதால் தீயினும் அஞ்சப்படும் என்றார்.


# 3. அறிவினுள் எல்லாம் தலையென்ப தீய செறுவார்க்கும் செய்யா விடல்.


தமக்குத் தீமை செய்கின்ற எதிரிகளுக்கும் தீங்கினைச் செய்யாமல் இருக்கும் அறிவினை, (தமக்கு நன்மையை விரும்பும்) அறிவுகள் எல்லாவற்றுள்ளும் தலைமையான அறிவென்று அறிஞர் சொல்லுவர்.

செறுவார் = பகைவர்
செய்யா = செய்யாது
விடல் = தீவினைகளைச் செய்யாது விடுவதற்குக் காரணமாகிய அறிவு.
இது காரியவாகு பெயர்.

எக்காரணத்தினாலும் யாருக்கு யார் தீமை செய்தாலும் அத்தீமை அவரையே வந்து சேரும். குற்றம் செய்தவரை சட்டப்படி தண்டிப்பதே முறைமை. தாமே தண்டிப்பது குற்றமாகும் என்ற விவேகம் அறிவினுள் எல்லாம் தெளிந்த அறிவாகும். ஆகவே அந்த அறிவினை "அறிவினுள் எல்லாம் தலை" என்று கூறினார்.

இவை மூன்று பாட்டாலும் தீவினைக்கு அஞ்சவேண்டும் என்று சொல்லப்பட்டது.





## 4. மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின் அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு.

ஒருவன் பிறனுக்கு கேட்டைத் தரும் செயலை மறந்தும் எண்ணாதிருப்பானாக. எண்ணினால் அவ்வாறு எண்ணினவனுக்கு கேட்டைத் தரும் செயலை அறக்கடவுள் எண்ணுவான்.

கேடு = கேட்டைத் தரும் தீவினைகள். காரியவாகு பெயர்.
சூழற்க = எண்ணற்க.

பிறருக்கு தீங்கு எண்ணுபவனை விட்டு அறக்கடவுள் - தர்மதேவதை - நீங்கும். அவ்வாறு நீங்குவதே அவனுக்குத் தீங்காகும்.

பிறருக்குத் தீங்கு செய்ய நினைப்பது தொடர்பழக்கமாகி அறத்தைப் பற்றிய நினைவு படிப்படியாக நீங்கும். அதனால் நல்லதை விட்டுத் தீயதைச் செய்யக் கேடு வரும்.

தீவினையைச் செய்தலேயன்றி செய்ய எண்ணுதலும் பாபமாகும் எனப்பட்டது.

## 5. இலனென்று தீயவை செய்யற்க செய்யின் இலனாகும் மற்றும் பெயர்த்து.

இலன் = இல்லாதவன்
பெயர்த்து = பின்னரும்

என்னிடத்தில் ஒன்றுமில்லை - நான் வறியவன் - என்று நினைத்து (அவ்வறுமை நீங்குவதற்காக) ஒருவன் தீயசெயல்களைச் செய்யாதிருப்பானாக. செய்தால் பின்னும் வறுமையுடையவனாவான்.

தீமை செய்த பாபத்தினால் மறுமையிலும் வறுமையுடையவனாவான் என்பது கருத்து.

வறுமை நீங்கவேண்டுமென்று ஒருவன் தீயசெயல்களைக் செய்தால் மீண்டும் வறுமையுடையவனாவான்.







## 6. தீப்பால தான்பிறர்கண் செய்யற்க நோய்ப்பால தன்னை அடல்வேண்டா தான்.

துன்பம் செய்யும் பாபங்கள் தன்னைப் பின்வந்து துன்புறுத்துவதை விரும்பாதவன் (பிறருக்குத் துன்பம் தரும்) தீயசெயல்களை தான் பிறரிடத்தில் செய்யாதிருப்பானாக.

தீப்பால = தீமையைத் தரும் தன்மையுடைய வினைகள்
நோய்ப்பால = துன்பம் தரும் தன்மையுடைய பாவங்கள்
தன்னை அடல் வேண்டாதான் = தன்னை வருத்துதலை விரும்பாதவன்.

தான் துன்பம் அடைதலை விரும்பாதவன் பிறருக்குத் துன்பம் தரும் பாவச்செயல்களை செய்யாதிருப்பானாக.

# 7. எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை வீயாது பின்சென் றடும்.

எவ்வளவு பெரிய பகையையுடையவரும் (ஏதோ ஒரு வழியில் அப்பகையிலிருந்து) தப்பிப்பர். ஆனால் தீவினையாகிய பகையானது நீங்காமல் சென்றவிடமெல்லாம் பின்னே சென்று அவரை அழிக்கும்.

எனைப்பகை = எப்படிப்பட்ட பகையும்
உய்வர் = விடுபடுவர்
வினைப்பகை = தீவினை எனும் பகை
வீயாது = நீங்காமல் இருந்து
அடும் = கொல்லும்.

நமது இப்போதைய உலக வாழ்க்கையில் ஏற்படும் பகையிலிருந்து தப்பிப்பதற்கு ஏதாவது வழி இருக்கும். ஆனால் ஒருமுறை செய்தவினை அதற்கான பயனைக் கொடுத்தே தீரும். தீயவினையைச் செய்தவர் அதனால் ஏற்பட்ட பாபத்திலிருந்து தப்பிப்பதற்கு வழியே இல்லை. அடுத்த உடலை எடுத்தாலும் அது பின்தொடர்ந்து வந்து வருத்தும்.





## 8. தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
## வீயாது அடியுறைந் தற்று.

பிறருக்குத் கெடுதலைச் செய்தவர் தாம் கெடுதல் எப்படிப்பட்டதென்றால் ஒருவனது நிழலானது அவன் நீண்டதூரம் சென்றாலும் விடாதுவந்து அவனுடைய கால்களின் அடியில் தங்குவது போன்றதாகும்.

அடியுறைந்து அற்று = காலடியில் தங்கி இருப்பது போன்றது.

செய்தவினையின் பயனானது எங்கு சொன்றாலும் நீங்காமல் பின்தொடர்ந்து வந்து அவனையே சாரும் என்ற சென்ற குறளுக்கு உபமானமாகும்.

செய்த தீவினையின் பயன் நிழலைப் போல் தொடர்ந்திருந்து கொல்லும்.

# 9. தன்னைத்தான் காதல னாயின் எனைத்தொன்றும் துன்னற்க தீவினைப் பால்.

ஒருவன் தன்னை இன்பமுடையவனாக இருக்க தான் விரும்பினால் தீவினையின் அளவு எவ்வளவு சிறியதென்றாலும் (பிறருக்குச்) செய்யாதிருப்பானாக.

காதலன் ஆயின் = விரும்புவான் என்றால் - தான் எப்பொழுதும் சுகமாக இருக்க விரும்பினால்
தீவினைப்பால் = தீவினையின் பக்கம்

வினையானது நல்வினை தீவினை என இரண்டு பகுதியாக இருக்கிறது. நல்வினையின் பயன் இன்பம். தீவினையின் பயன் துன்பம். ஒருவரும் தனக்கு துன்பத்தை விரும்புவதில்லை. அனைவரும் தான் எப்பொழுதும் இன்பமாக இருக்கவேண்டுமென்றே விரும்புகின்றனர். அவ்வாறு விரும்புபவன் பிறருக்குத் துன்பம் தருவதாகிய தீயசெயல்களை - அது பாபமாகிப் பின்னர் தனக்குத் துன்பமாக வந்துசேரும் என்றறிந்து - ஒருபொழுதும் ஒருசிறிதும் ஒருவருக்கும் செய்யாமல் இருக்க வேண்டும்.

ஒருவன் தான் இன்பமாக இருக்கவிரும்பினால் பிறருக்கு துன்பத்தைத் தரும் தீயசெயல்களைச் செய்யாதிருப்பானாக.

இவை ஆறுபாட்டாலும் ஒருவன் பிறருக்குத் தீவினை செய்தால் அதனால் தான்கெடுவான் என்பது சொல்லப்பட்டது.





# 10. அருங்கேடன் என்ப தறிக மருங்கோடித் தீவினை செய்யான் எனின்.

ஒருவன் கெட்டவழியில் சென்று தீயசெயல்களைப் பிறருக்குச் செய்யவில்லையென்றால் அவன் கேடு இல்லாதவன் என்பதை அறிந்து கொள்ளவேண்டும்.

அருங்கேடன் = கேடு அரியன். கேடு இல்லாதவன்.
கேடு = அழிவு. பாபத்தினால் வரும் அழிவு, துன்பம். அருமை என்பது இங்கு இன்மைப் பொருளில் வந்தது.
மருங்கு ஓடி = கெட்ட வழியில் சென்று.

இன்பமும் துன்பமும் புண்யபாபத்தினால் வருவது. புண்யபாபம் நல்வினை தீவினைகளால் வருவது. தீவினைகளை ஒருவன் செய்யவில்லையென்றால் அவனுக்குத் துன்பம் வருவதில்லை.

இதனால் தீவினை செய்பவன் துன்பம் அடைவான்; தீவினை செய்யாதவன் துன்பம் அடைவதில்லை என்பது கூறப்பட்டது.



ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்– தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(மாங்குடி மருதனார்)



1. Youtube Channels:

   Swami Omkarananda

   Vedapuri Events

   Swami Purnananda Tamil

2. Instagram - swami_om_karananda

3. Facebook - Swami omkarananda

4. Facebook Group - Theni Swami Chidbhavananda Ashramam

5. Whatsapp Channel - Theni Swami Chidbhavananda Ashramam


94430 51910

www.vedaneri.org

vedapuricamps@gmail.com